விழுப்புரம் தெற்கு மாவட்டம், கோலியனூர் பனங்குப்பம் கிளைச் செயலாளர் ஆர். பாலு மகன் திருமண விழாவை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களும் திருமதி.விசாலாட்சி, பொன்முடி ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைத்து வாழ்த்தினார்கள். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், குமார்ஸ்கல்வி நிறுவனர் கோத.குமார், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் நேற்று (10.09.2023 ஞாயிற்றுக்கிழமை) சென்னை, வில்லிவாக்கம், சிட்கோ நகர், இராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

திண்டுக்கல்லில் மாநில அளவில் தேசிய நுகர்வோர் தினம்:

2,182 பயனாளிகளுக்கு ரூ.14.56 கோடி மதிப்பிலான கடனுதவிகள்!

அமைச்சர்கள் இ.பெரியசாமி - கே.ஆர் பெரிய கருப்பன்- அர. சக்கரபாணி வழங்கினர்!

திண்டுக்கல், செப்.11

திண்டுக்கல்லில் மாநில அளவிலான தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா நடைபெற்றது. விழாவில் அமைச்சர்கள் இ.பெரியசாமி கே.ஆர் பெரியகருப்பன் அர.சக்கரபாணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார். விழாவில் 2,182 பயனாளிகளுக்கு ரூ.14.56 கோடி மதிப்பிலான கடனுதவிகள், தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழாவை முன்னிட்டு மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகைகள், நியாய விலைக் கடைகளில் சிறப்பாக பணிபுரிந்த 2 விற்பனையாளர்கள் மற்றும் 2 எடையாளர்களுக்கு பரிசுத்தொகைகள் ஆகிய வற்றை அமைச்சர்கள் வழங்கினர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .இ.பெரியசாமி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களுக்கான திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்துத் திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதோடு மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முன்னிலை பெற வேண்டும் என்பதற்காக அயராது உழைத்து வருகிறார்கள்.

பொதுவிநியோகத் திட்டம், அத்தியாவசியப் பொருட்கள் சுமார் 8.00 கோடி மக்களுக்கும் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. கூட்டுறவுத்துறை மூலம் நியாயவிலைக் கடைகள் வாயிலாக கொரோனா காலத்தில் ரூ.4,000 வழங்கப்பட்டது. கூட்டுறவுத்துறையை பன்முகத்தன்மையுடன் செயல்படுத்துவதற்கான மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நுகர்வோர்களை பாதுகாக்கவும், அவர்களின் குறைகளை தீர்க்கவும் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. அதற்காக தேசிய நுகர்வோர் தினம், உலக நுகர்வோர் உரிமைகள் தினங்களை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன, என மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்களின் பலன்கள் கடைகோடி மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் அனைத்து அரசுத் துறைகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. பொதுவிநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு தரமான அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

தமிழகத்தில் சுமார் 2.24 கோடி குடும்ப அட்டைகள் உள்ளன. இதன்மூலம் சுமார் 8.00 கோடி மக்களுக்கு தரமான சேவை வழங்கப்பட்டு வருகிறது. நெருக்கடியான காலகட்டங்களிலும் பொதுவிநியோகத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் பாதுகாப்பு, உரிமை மற்றும் நலனை பாதுகாக்கும் வகையில் ஒன்றிய அளவிலும், மாநில அளவிலும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையங்கள் உள்ளன. நுகர்வோரின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதுகாக்க இந்த ஆணையங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பொருட்களை வாங்கும்போது அதிலுள்ள தயாரிப்பு தேதி, காலாவதி தேதி, விலை ஆகியவற்றை கவனித்து வாங்க வேண்டும். இதில் ஏதேனும் முறைகேடுகள் இருப்பின் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திடம் முறையிட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரிகளிலும் நுகர்வோர் மன்றங்களை உருவாக்கி, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறித்து மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திடுவதோடு, அவர்களின் மூலமாக மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் மாநில அளவிலான "நுகர்வோர் தகவல் மையம்" செயல்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வானொலி, தொலைக்காட்சி வாயிலாக நுகர்வோர் கல்வி நிகழ்வுகளை நடத்தி வருகிறது. மேலும், தொடர்ச்சியாக கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள் நடத்துவதுடன், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன். நுகர்வோர் நலன் கருதி செயல்படும் தன்னார்வ ஆர்வலர்கள், சேவை தருபவர்களுடன் அவ்வப்போது கலந்துரையாடல்களும் நடத்தப்படுகின்றன. மேலும், கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் மன்றங்களை நிறுவி மாணவர்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. நுகர்வோர் மன்றங்கள் சீரிய செயல்பாடுகளுடன், புதிய யுத்திகளை செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன.

நுகர்வோரின் பாதுகாப்பினையும், உரிமையையும் நிலைநாட்டும் வகையிலும், சந்தை ஏற்ற இறக்கங்களில் சாமானிய மக்களும் பாதிப்படையா வண்ணம் தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையின் மூலம் கூட்டுறவு அங்காடிகள், பண்ணை பசுமை காய்கறிக் கடைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன. மேலும், நவீன உலகிற்கு ஏற்ப கூட்டுறவு பொருட்களை மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் வகையிலும் கூட்டுறவு சந்தை (COOP Bazaar) என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பொதுமக்களிடத்தில் இந்த செயலிக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நுகர்வோர் குறைதீர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் தங்களது பிரச்சனைகளை இங்கு தீர்வு கண்டு பயனடையவும், இது குறித்த விழிப்புணர்வினை அனைவரிடத்திலும் ஏற்படுத்த வேண்டும், என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையின் பயனாக மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு 30 தலைவர்கள் மற்றும் 55 உறுப்பினர்களை நியமிக்கப்பட்டுள்ளனர். ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் மாநில அளவில் 3,105 வழக்குகளுக்கும், மாவட்டங்கள் அளவில் 12,861 நுகர்வோர் வழக்குகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் 15,06,189 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 26,261 முழு நேர நியாயவிலைக்கடைகள், 10,124 பகுதி நேர நியாய விலைக் கடைகள் என மொத்தம் 36,405 நியாயவிலைக் கடைகள் உள்ளன.

மேலும், நியாய விலைக் கடைகளில் கைரேகை பதிவு மூலம் பொருட்கள் வாங்கும்போது சில சிரமங்கள் ஏற்படுகின்றன. அவற்றை தவிர்க்கும் வகையில் விரைவில் கண் கருவிழி மூலம் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் என நியாயவிலை கடைக்குச் செல்ல முடியாதவர்கள், பொருட்கள் வாங்க வேறு ஒரு நபரை நியமித்து விண்ணப்பம் அளித்தால், அந்த நபரிடம் பொருட்கள் வழங்கப்படும். அந்த வகையில் தமிழகததில் சுமார் 3.50 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர்.

நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்க வேண்டும் என்பதற்காக கலர்டாப்ளர் இயந்திரம் பொருத்தப்பட்ட அரிசி ஆலைகளில் மட்டுமே நெல் அரவை செய்யப்பட்டு, அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 31,000 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 17.00 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

விழாவில், அமைச்சர்கள் மகளிர் சுயஉதவிக்குழு கடன் 67 குழுக்களுக்கு(811 பயனாளிகள்) ரூ.4.77 கோடி, கேசிசி பயிர்க்கடன் 163 பயனாளிகளுக்கு ரூ.1.47 கோடி, கால்நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக்கடன் 58 பயனாளிகளுக்கு ரூ.38.58 இலட்சம், மத்திய கால பால்மாட்டுக் கடன் 13 பயனாளிகளுக்கு ரூ.13.00 இலட்சம், மாற்றுத்திறனாளி கடன் 7 பயனாளிகளுக்கு ரூ.3.50 இலட்சம், டாம்கோ கடன் ஒரு பயனாளிக்கு ரூ.50,000 என மொத்தம் 1053 பயனாளிகளுக்கு ரூ.6.80 கோடி மதிப்பிலான கடனுதவிகள், திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் மகளிர் சுயஉதவிக்குடு கடன் 61 குழுக்களுக்கு(735 பயனாளிகள்) ரூ.4.90 கோடி, சிறு வணிகக்கடன் 240 பயனாளிகளுக்கு ரூ.2.23 கோடி, கூட்டுப்பொறுப்புக்குழு கடன் 112 பயனாளிகளுக்கு ரூ.45.80 இலட்சம், மாற்றுத்திறனாளி கடன் 27 பயனாளிகளுக்கு ரூ.10.50 இலட்சம், கைம்பெண்கள் கடன் 15 பயனாளிகளுக்கு ரூ.7.00 இலட்சம் என மொத்தம் 1129 பயனாளிகளுக்க ரூ.7.76 கோடி மதிப்பிலான கடனுதவிகள் என ஆக மொத்தம் 2,182 பயனாளிகளுக்கு ரூ.14.56 கோடி மதிப்பிலான கடனுதவிகள் மற்றும் தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழாவை முன்னிட்டு மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் 6 நபர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத்தொகை, மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் 48 நபர்களுக்கு பரிசுகள், நியாய விலைக்கடைகளில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 2 விற்பனையாளர்கள் மற்றும் 2 எடையாளர்களுக்கு பரிசுத்தொகைகளை வழங்கினர்.

இவ்விழாவில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் .ப.வேலுச்சாமி, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் பூஜா குல்கர்னி வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர் ச. காந்திராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி கோடம்பாக்கம் மண்டலத்தில்

போக்குவரத்திற்கு இடையூறாக வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் அகற்றம்!

மேயர் ஆர்.பிரியா நேரில் ஆய்வு!

சென்னை,செப்.11-

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், மண்டலத்திற்குட்பட்ட பனகல் பார்க் அருகில் உள்ள பிரகாசம் சாலையில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை காவல்துறையுடன் இணைந்து அப்புறப்படுத்தும் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேயர் நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்தும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து இப்பணிகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில், கோடம்பாக்கம் மண்டலம், பிராகசம் சாலையில் 3 வாகனங்களும், ஜி.என்.செட்டி சாலையில் 2 வாகனங்களும் ஒய் பாளம் (Y Bridge) அருகில் 1 வாகனம் மாம்பலம் பிரதான சலையில் 2 வாகனங்களும் கண்ணதாசன் தெருவில் 2 வாகனங்கள் காவல்துறை உதவியுடன் இன்று அப்புறப்படுத்தப்பட்டது. கோடம்பாக்கம், மண்டலம் பனகல் பார்க் அருகில் உள்ள பிரகாசம் சாலையில் காவல்துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வாகனங்களை அப்புறப்படுத்தும் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா 09.09.2023 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், மேயர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

பெருநகர சென்னை மாநகராட்சியின் 202223ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்கள் செப்டம்பர் 1ஆம் தேதி முதல் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று கைவிடப்பட்ட நிலையில் 1,308 வாகனங்கள் கண்டறியப்பட்டது. இது குறித்து ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 30 வாகனங்களை சாலை ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உரிமையாளர்கள் தாமாக முன்வந்து சம்பத்தப்பட்ட வாகனத்தின் ஆவனங்களை காண்பித்து எடுத்துச் சென்றனர். செப்டம்பர் 1ஆம் தேதி எழும்பூர், மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் இது வரை 27 வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

கோடம்பாக்கம் மண்டலத்திற்க்குட்பட்ட தி.நகர் பகுதியில் கேட்பாரற்று 16 வாகனங்கள் இருப்பது கண்டயறியப்பட்டது. இதில் 6 வாகன உரிமையாளர் தாமாக முன்வந்து தங்களது வாகனத்தை எடுத்துச் சென்றனர். மீதமுள்ள 10 வாகனங்கள் சென்னை மாநகராட்சியின் சார்பாக அப்புறப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. சௌராய் நகரில் உள்ள தாலுகா அலுவலகத்தின் அருகில் சென்னை மாநகராட்சியின் இடத்தில் இந்த வாகனங்கள் எடுத்து செல்லப்படுகிறது.

இந்த ஆய்வின்போது, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், கோடம்பாக்கம் மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. - சி.எவி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காஞ்சிபுரம் மாநகரக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன் அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 11 -

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (11.9.2023) காலை 9.30 மணிக்கு சின்னகாஞ்சிபுரம், வடக்கு மாடவீதி, சி.ஆர்.வி. திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்கு மாநகர அவைத் தலைவர் கே.ஏ. வெங்குட்டுவன் தலைமை வகிக்கிறார். நான் (சி.கே.வி.தமிழ்செல்வன்) வரவேற்றிட, எ.எஸ். முத்துசெல்வம், வ. ஜெகன்நாதன், டி.நிர்மலா, கு.சுப்புராயன், எஸ்.சந்துரு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.எ. சிறப்புரையாற்றிட, சிறுவேடல் க.செல்வம் எம்.பி., மேயர் மகலாட்சுமி, சன்பி ராண்ட் ஆறுமுகம், எஸ். கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, ஜி.சுகுமாறன், தி.அன்பழகன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பெ.சுந்தரவரதன், கே.திலகர், அ.தசரதன், க.வெங்கடசன், எஸ். சுகுமாறன், எஸ்.மாமல்லன், பி.சுரேஷ், பி.சங்கர், த.விஸ்வநாதன், அ.பாலமுருகன், எஸ். ரவிக்குமார் , ஜெ.வரதராஜன், எஸ்.சேகர், எஸ்.வி.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். அதுபோது செப்டம்பர் 15 அண்ணா பிறந்த காஞ்சிக்கு வருகை தரும் முதல்வர் அவர்களின் வருகை குறித்து மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே இக்கூட்டத்தில் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் மாவட்டட்டட்டட்ட, மாநகர, அணிகளின் நிர்வாகிள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வி.கே.வி. தமிழ்செல்வன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கரூர் மாவட்டம்

மாயனூரில் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளி!

மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்!

கரூர், செப்.11

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி மாவட்ட அரசு மாதிரி பள்ளி கரூர் மாவட்டம் மாயனூரில் துவக்கி வைக்கப்பட்டது.

கரூர் மாவட்டம் மாயனூர் கரூர் அரசு மாதிரிப் பள்ளியை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் க.சிவகாமசுந்தரி(கிருஷ்ணராயபுரம்), இரா. மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ ஆகியோர் முன்னிலை வைத்தார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் பள்ளி கல்வித்துறையை மேம்படுத்தும் விதமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் அரசு மாதிரி பள்ளியினை சென்ற வருடம் துவக்கி வைத்தார்.

அதேபோல் இவ்வாண்டு முதல் கரூர் மாவட்டத்தில் செயல்படவுள்ளது. மாயனூர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் இப்பள்ளியை துவக்கி வைப்பதன் காரணம், மாயனூர் என்ற இடம் அகன்ற காவிரி பாயும் இந்த மண்ணில் மாணவர்களுக்கு கல்வி கற்கும் உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையில் இவ்விடம் அமைந்துள்ளது.

அது மட்டுமல்லாமல் மாவட்டத்தின் மையப்புள்ளியாகவும், தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. மாணவர்கள் வந்து செல்ல வசதியாகவும் இருக்கும் ஆகவேதான் இவ்விடத்தை நாங்கள் தேர்வு செய்துள்ளோம். மாயனூர் ஆசிரியர் பள்ளியில் ஆசிரியர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்த அதே இடத்தில் தேர்வு செய்து மாணவர்களுக்கு கல்வி அறிவை செலுத்துவதன் அடிப்படையில் இந்த மாதிரிப் பள்ளி இங்கே உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கே கட்டடம் கட்டுவதற்காக முதலமைச்சர் அவர்கள் ரூ.2.25 கோடி மதிப்பில் நிதிகளை ஒதுக்கீடு செய்துள்ளார். அதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விடம் கல்விக் கற்றலுக்கு உகந்த பள்ளியாக இருப்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இங்கே பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டடங்களை தயார்படுத்தி உள்ளோம்

மேலும், யோகா, வேலை வாய்ப்புகளுக்கான திறன் பயிற்சியும், ஓவியம் பயிற்சி போன்ற நற்பண்புகளை கற்றுக் கொடுக்கப்படும். இங்கே பயிலக்கூடிய மாணவர்களுக்கு ஒரே வேண்டுகோள் அடுத்த வருடம் இங்கே பயிலக்கூடிய மாணவர்கள் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் அதிக அளவில் சேர வேண்டும். அவ்வாறு சேர்வதற்கான பயிற்சிகளை நீங்கள் இப்பொழுதே தயார் படுத்திக் கொள்ள முன் வரவேண்டும் .

இந்த மாதிரி பள்ளியில். பள்ளிப்படிப்பு முடித்து வெளியேறும் போது பல்வித நற்பண்புகளை பெற்றிருக்க வேண்டும். கல்வி கற்க வேண்டிய நேரத்தில் கல்வியையும், விளையாடும் நேரத்தில் விளையாட்டுகளையும் தேர்வு செய்து படிக்க வேண்டும். கல்வியை சுமையாக கருதாமல் ரசித்து விரும்பி படிக்க வேண்டும். நீங்கள் அகன்ற காவேரி எப்படி கம்பீரத்துடன் மக்களின் வாழ்க்கை வளத்தை தருவது போல் மாணவர்களாகிய நீங்கள் கல்வி வளத்தைப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

பின்னர் மாணவ - மாணவியருக்கு பாட நூல்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சுமித்ரா தேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுமதி, குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன், தனித்துணை ஆட்சியர் சைபுதீன். மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சண்முக வடிவேல், மாதிரி பள்ளி மண்டல ஒருங்கிணைப்பாளர் தீனதயாள், மாதிரி பள்ளி தலைமையாசிரியர் விஜயலட்சுமி மற்றும் அரசு பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு திராவிட மாடல் அரசின் தொடர் சாதனை விளக்கும் மற்றும் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் இந்தியா கூட்டணி காட்சிக்கான தேர்தல் பரப்புரை திண்ணை பிரச்சாரம் கூட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றிய செயலாளர் பா.ஆர்த்தி ரவி தலைமையில் சத்தியரஞ்செயபுரம் ஊராட்சியில் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் வேளச்சேரி ஊராட்சியில் மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கே.தேஜா முன்னிலையில் நடைபெற்றது மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமை கழக பேச்சாளர் திருப்பூர் ரஜினிசெந்தில் சிறப்புரையாற்றினார்கள். உடன் கே.சிரஞ்சீவ்லு, எம்.ஷெரீப், து.ஆறுமுகம், ம.கிரண், சி.சு.விஜயகுமார், சத்தியராஜ், எஸ்.கோபி, கோதண்டன், வேணுகுமார், வி.எம்.ஆர்.நரேந்திரன், தாண்டமூர்த்தி, ஜெ.வேலு, என்.சீனிவாசன், எஸ்.ராமு, சுப்பிரமணி, எம்.பாபு, யுவராஜ், ஜெ.ரமேஷ், ஷாம்சுந்தர், முரசொலி மூர்த்தி, சித்திக், பன்னீர் செல்வம், தேவேந்திரன், ஆர்.எம்.பாபு, மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.